# 5வது இந்தியா-சீன தளத்தகை பேச்சுவார்த்தை

ஆகஸ்ட் 20, 2013

இந்தியா சீனா இடையேயான 5வது தளத்தகைப் பேச்சுவார்த்தை புதுதில்லியில் இன்று நடைபெற்றது. இந்திய தரப்பில் இந்திய வெளியுறவுத்துறை செயலர் சுஜாதா சிங் தலைமை தாங்கினார். சீன தரப்பில் சீன வெளியுறவு துணை அமைச்சர் லியூ ழென்மின் தலைமை தாங்கினார். இந்த பேச்சுவார்த்தைகளின் போது இருதரப்பிலான அளவில் பரஸ்பர விருப்பம் கொண்ட, பிராந்திய மற்றும் சர்வதேச பிரச்சினைகள் விவாதிக்கப்பட்டன.

சீன பிரதமர் லீ கிகியாங் இந்தியாவில் வெற்றிகரமாக மேற்கொண்ட சுற்றுப்பயணத்தைத் தொடர்ந்து இருதரப்பு உறவுகளில் சமீபத்திய முன்னேற்றங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது. எல்லை கடந்து வரும் நதி நீர் பயன்பாடு குறித்த புரிந்துணர்வை விரிவு படுத்துதல், இரு தரப்பு வாணிபம் மற்றும் முதலீடு ஆகியவற்றை விரிவுபடுத்துதல், இந்தியா எதிர்நோக்கும் மிகப்பெரிய பற்றாக்குறையை எதிர்கொள்வது குறித்தும், கட்டுப்பாட்டில் உள்ள எல்லைக்கோட்டுப்பகுதியில் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை பராமரித்தல் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்பட்டன. கலாசார ஒத்துழைப்பை அதிகரித்தல், மக்களுடன் மக்கள் பரிமாற்றங்களை அதிகரித்தல்குறித்தும் விவாதிக்கப்பட்டன. பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங், இந்த ஆண்டு இறுதியில் சீனா செல்வதற்கான வாய்ப்புகள் குறித்தும் இரு தரப்பினரும் விவாதித்தனர். பி.சி.ஐ.எம். பொருளாதார ஒத்துழைப்புக்கான வாய்ப்புகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

பிரிக்ஸ் கட்டமைப்பில் வருங்கால ஒத்துழைப்பு, திறந்த மற்றும் அனைத்தும் உள்ளடக்கிய, மற்றும் வெளிப்படையான கட்டமைப்பு ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் உறுதி செய்யும் வகையில் விவாதிக்கப்பட்டன. மேலும் 2014 மற்றும் அதற்கும் மேல் ஆப்கானிஸ்தானுக்கான அணுகுமுறை குறித்தும் விவாதிக்கப்பட்டன.

சீன வெளியுறவு துணை அமைச்சர் லியூ இந்திய வெளியுறவுத்துறை அமைச்சரை சந்தித்தார்.

6வது இந்தியா-சீனா இடையேயான தளத்தகை பேச்சுவார்த்தை இருதரப்பிற்கும் ஏற்ற நேரத்தில் பீஜிங்கில் நடத்தப்படும்.

**புதுதில்லி**
**ஆகஸ்ட் 20, 2013**